மாகப் பெருக்க தீவிரமாக முயற்சி செய்தாக வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக இந்த விதை உற்பத்தி செய்யும் முறையைக் கையாண்டு வருகிறோம். தற்பொழுது தனியாரிடத்திலே வாங்கினாலும்கூட, சோதித்துப் பார்த்து, சான்றிதழ் கொடுத்து, அதற்குப் பிறகு விற்க அனுமதிக்கப்படுகிறது.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் கம்பானாலும் சரி, நெல்லானாலும் சரி, ஆண்டுக்காண்டு அதனுடைய வீரியம் குறைந்துகொண்டே வருகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் ஏ. டி. டி. 27 முதலில் இருந்த விளைச்சல் இப்பொழுது இல்லை. எனவே, இந்த வீரியம் குறையாமல் பாதுகாக்க நல்ல திட்டம் ஏதேனும் அரசு வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இதற்காகத்தான் விதைப்பண்ணை தேவைப்படுகிறது. ஹைப்ரிட், வீரியம் அதிகமாக உள்ள விதைகள் எல்லாமே நாளாவட்டத்தில் தலைமுறைக்குத் தலைமுறை சற்றுக் குறைவாக விளைகிறது. ஆகவேதான், நாங்களும் புதிது புதிதாக விதைகளைக் கண்டுபிடித்துக் கொண்டு வருகிறோம். பஜ்ரா அல்லது கம்பு என்று சொல்லப்படும் விதையை நிச்சயமாக அரசாங்கத்திடமிருந்து பெற வேண்டும், அரசாங்க விதை பண்ணையிலிருந்து பெற வேண்டும். அல்லது அரசாங்கம் சர்ட்டிபிகேட் பெற்றதைப் பெற வேண்டும். வெளியிலே வாங்கினால் வீரியம் குறைவாகவும். விளைச்சல் குறைவாகவும் இருக்கும்.

அறநிலையத் துறை முன்னுள்ள வழக்குகள்

*** 224 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலுள்ள இந்து அறநிலையத் துறை துணை ஆணையாளர் முன்பாக 1972, 1973, 1974 நிதியாண்டுகளில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை?

(இ) அவைகளுள் இதுவரை தீர்ப்பு கூறப்பட்டவை, தீர்வு காணாமல் இருக்கும் நேர்வுகள் முறையே எத்தனை?

(உ) தீர்வு காணாமல் இருக்க காரணம் என்ன?

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] 1975 நவம்பர் 6]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) 371.

(இ) அவைகளில் தீர்ப்பு கூறப்பட்டுள்ளவை 293. தீர்வு காணுமல் நிலுவையில் இருப்பவை 78.

(உ) மொத்தம் நிலுவையிலுள்ள 78 வழக்குகளில் 45 வழக்குகள் திருநெல்வேலி துணை ஆணையருக்கு மாற்றப் பட்டுள்ளன. மீதியான 33 வழக்குகள் விசாரணையில் உள்ளன.

திருப்பெரும்புதூர் கிராமத்தொழில் திட்டக்குழு

*225 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம், திருப்பெரும்புதூரில் அமைந்துள்ள கிராமத்தொழில் திட்ட ஆலோசனைக்குழுக் கூட்டம் சீராக நடைபெறுவதில்லை என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, ஏற்கனவே திருப்பெரும்தூரில் கிராமத் தொழில் திட்ட ஆலோசனைக் குழு திருப்பெரும்புதூர் வட்டத்திற்கும், திருவள்ளூர் வட்டத்திற்கும் உரியதாக இருந்தது. அப்பொழுது எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் அதில் உறுப்பினர்களாக இருந்தார்கள். ஆனால் இப்பொழுது மாவட்டம் முழுவதற்குமாக உருவாக்கி ஒரு சட்ட மன்ற உறுப்பினர் மட்டும் அதில் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் தொகுதி தொழில் திட்டம் பற்றிக் கூறும் வகையில் மாவட்டத்தின் எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் அதில் இடம்பெற நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, முதலில் இந்தத் திட்டம் சில மாவட்டங்களினுடைய சில இடங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டது. பிறகு மாவட்டம் முழுவதும் விரிவாக்கப்படும் நேரத்தில் மாவட்டத்தின் சார்பில் ஒரு சட்டமன்ற உறுப்பினரும், ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும்